பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

சனவரி 2017



நன்மக்கள் உள்ளமெலாம்
நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறிபால் எல்லோரும்
ஒருங்கிணைந்து திரும்பட்டும்!

பல்சுவை
தமிழ்நெஞ்சம்
தோற்றம் 1972
சனவரி 2017

ஆசிரியர் :
அமின் மொஹமெட்

இணையாசிரியர் :
சஃபி மொஹமெட்

ஆசிரியர் குழு :
ஹிப்ஸுர் ரஹ்மான்
சத்தியபாமா சந்திரன்
அழகுநிலா
சு.பீர்முகமது
ஓவியக்கவிஞர் உமாபதி
'நம் குடும்பம்' ஆ. வர்க்கீஸ்
நெல்லை உலகம்மாள்
வசந்தி ஆதித்தன்
கவிஞர் அ.முத்துசாமி
கவிஞர் ஈழபாரதி
கவிதாயினி செந்தாமரைக்கொடி
கவிஞர் கலந்தர் பூமதீன்
கவிஞர் பாலமுனை பாறூக்

ஆலோசகர்கள் :
"பைந்தமிழரசு" பாவலர் மா. வரதராசன்
கவிதாயினி சக்தி ஜோதி
கவிதாயினி அமுதா பொற்கொடி

web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com

புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன. நூல் விமர்சனத்துக்கு, நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும்.

படைப்புகளுக்கு படைப்பாளிகளே பொறுப்பு. செவ்வைப் படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.

# அன்பானவர்களே...

வணக்கம்!

அந்தரத்தில் கயிற்றில் நடப்பதுபோல் இதழியல் பயணம்!

எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டும், பொருளிழந்தும் இவ்வேட்கையிலிருந்து விடுபட இயலாதிருப்பது நிதர்சன உண்மை!

தமிழ் எழுத்தாளர்களை உருவாக்கவும், ஊக்குவிப்பும் மட்டுமே எண்ணத்தில் கொண்டு செயலாற்றி வரும் தமிழ்நெஞ்சம் தமிழுக்காக தம்மாலான பணிகளில் தன்னை ஈடுபடுத்தி வருகிறது. எழுத்தாளர்களும் வாசகர்களும் எமது பணிக்குத் துணை நிற்பீர்களென்ற துணிவில் பயணத்தைத் தொடர்கிறது.

நிறையிருப்பின் வாழ்த்துங்கள். குறை காண்பின் சுட்டிக்காட்டுங்கள்.

மரபுக்கும், நவீனத்துக்கும் தளமமைக்கும் எங்களுக்குத் துணையாயிருந்து செயல்படுங்கள்.

இது உங்கள் இதழ். இதை வளர்ப்பது உங்கள் கையில்.

எழுதுங்கள். தமிழிலக்கியத்தில் தங்களை நிலை நாட்டுங்கள்.

அன்புடன்
ஆசிரியர்





# கருது விளைஞ்சிருக்கு!

நெல்லும் விளைஞ்சிருக்கு
நெஞ்சும் நிறைஞ்சிருக்கு!
அல்லி மலருவொன்னு
அங்கே பூத்திருக்கு!
துள்ளும் அழகிருக்கு
தூண்டில் கண்ணிருக்கு
அள்ளி அணைப்பதற்கு
ஆசை மிகுந்திருக்கு!

வரப்பு வயலோரம்
வசந்தம் அமர்ந்திருக்கு
கருப்புக் குயிலுவொன்னு
காத்துத் தவமிருக்கு!
திரும்பும் திசையெங்கும்
தீயா நினைப்பிருக்கு
குறும்புப் பார்வையிலே
கோலம் குடியிருக்கு!

கருதும் அறுப்பதற்கு
காலம் கனிஞ்சிருச்சு
விருந்தும் வைக்கத்தான்
வேளை நெருங்கிருச்சு!
கரும்பே நாவுன்னைக்
கடிச்சுத் தின்னட்டுமா!
எறும்பா மாறியுந்தான்
எடுத்துச் சுவைக்கட்டுமா

பாவலர் தண்முகநம்பி

# எதிர்பாராத எளிமை



எந்நிலை மாறினும் தன்னிலை மாறா
மனிதரை காண்பது அரிது இன்று
எளிமை மாறா எழில் நங்கைகள்
வலம் வரும் கிராமம் இன்று
கள்ளமில்லா வெள்ளி நிலாக்கள்
கன்னு குட்டி பின்னால் துள்ளி ஓடி
காட்டு மேட்டில் கதை பேசி
வயல் காட்டில் களை பிடுங்கி
வளைய வரும் எளிமை அழகு
எதிர்பார்ப்பற்றது..

அழகழகாய் புள்ளிகள் வைத்து
அழகு கோலங்கள் வண்ணமாய்
கால் கொலுசு காதல் பேச
கை வளைகள் கானம் இசைக்க
கண் மை கிறங்கடிக்க
கச்சிதமான உடல் வாகு
கவர்ந்திழுக்க
ஆதவன் உதிக்குமுன் எழுந்து
அயராது உழைக்கும்
அழகு கிராமத்து எளிமைகள்..



ஆடம்பர முகப்பூச்சு இன்றி
அழகிய மஞ்சள் முகம்
அள்ளி வைத்த மல்லிப்பூ
அலை அலையான கூந்தல்
பசுமை நிறைந்த பாங்கான
பார்க்கவே ரம்மியமான
சூழலில் வாழும்
எளிமையான எதிர்பார்ப்பற்ற
கிராமத்து அழகு தேவதைகள்..

அம்மியில் அரைத்து
ஆட்டுக்கல்லில் ஆட்டி
உரலில் நெல்லு குத்தி
உச்சி வெயிலில் கஞ்சி
உள்ளந்தலையில் சுமந்து
நடந்து வரும் அழகிய
எதிர்பார்ப்பிலா எளிமைகள்
மண் வாசனை தேவதைகள்..!!

தாரிணி




# ஒரு நாட்டின் உயர்வுக்கு ஆசிரியர் பங்கு

சூரியனிலிருந்து எறியப்பட்ட நெருப்புப் பந்து தணிந்தது, பூமி என்னும் அழகான வடிவாய் உரு மாறியது. உயிரினங்களும் மரங்களும் தோன்றி அற்புதமான உலகாய் உருவெடுத்தது. இயற்கை மனிதனுக்குக் கிடைத்த அழகான கொடை ஆகும். இத்தனையும் இயற்கையிலிருந்து பெற்றுக் கொண்ட மனிதன், தன் முயற்சியைப் பயன்படுத்தி அழகான நவீன பூமியாக மாற்றியமைக்கின்றான். இப்பூமியைச் சிலர் ஆக்க நினைக்காது கொடிய ஆயுதங்கள் கொண்டு அழிக்க நினைக்கின்றார்கள். புதுமைகள் புதிய கண்டுபிடிப்புக்கள் உருவாக வேண்டுமானால், சிறப்பான கல்வியை இளைய தலைமுறையினர் காணவேண்டும். உலகம் அழிவை நோக்கிப் போகாமல் இருக்கவேண்டுமானால், ஒழுங்கான முறையில் பிள்ளைகள் வளர்க்கப்படல் வேண்டும். இதற்கு அடிப்படைக்கல்வி சிறப்பாக இருக்க வேண்டும்.

இன்றைய சிறுவர்கள் நாளைய பெரியவர்கள், மாதா, பிதா, குரு, தெய்வம், இவை நான்கும் ஒரு பிள்ளைக்கு அவசியம். பிள்ளை பிறந்தவுடன் அம்மாவைக் காண்கிறது. அம்மா சொல்லி அப்பாவைக் காண்கிறது. அப்பா, அம்மா பிள்ளைக்குக்குக் குருவைக் காட்டுகின்றார்கள். ஆசிரியர் கடவுளை வழிபட வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகின்றார்கள். எனவே ஒரு பிள்ளையை உருவாக்கும் பொறுப்பு முதலில் பெற்றோருக்கு இருக்கின்றது. அதன்பின் ஆசிரியர் கையிலேதான் தங்கியிருக்கிறது. தெய்வத்தைவிட முன்னிலையில் வைத்துப் பாராட்ட வேண்டியவர்கள் ஆசிரியர்களே.

'தாரமும் குருவும் தலைவிதிப்படி'' என்பார்கள். ஒரு பிள்ளைக்குக் கிடைக்கும் ஆசிரியரைப் பொறுத்துத்தான் கல்வியில் அப்பிள்ளை காட்டும் ஆர்வமும் முன்னேற்றமும் வளர்ச்சியும் தங்கியிருக்கும். ஆசிரியர் கற்பித்தவை மாணவர்கள் மனதில் பசுமரத்தாணி போல் பதிந்திருத்தல் வேண்டும். குரு நிந்தை செய்வோர், குரு நிறைவாய்க் கிடைக்காதவர்களாகத்தான் இருக்க வேண்டும். மாணவர் வகையை 'அன்னம், ஆவே, மண்ணொடு கிளியே, இல்லிக்குடம், ஆடு, எருமை, நெய்யெரி'' என தலை, இடை, கடை மாணாக்கராய்ப் பிரித்தல் போல நல்லாசிரியர்களுக்கும் இலக்கணம் கூறப்படுகின்றது.

"நிலம், மலை, நிறைகோல், மலர் நிகர் மாட்சியும்
உலகியல் அறிவோடு உயர் குணம் இயையவும்
அமைவன நூலுரை ஆசிரியர்'' எனப்படுகிறது.

தன்மேலே இருக்கும் சுமையால் கலங்காது, தோண்டினாலும் துன்புறாது நிலம். அதேபோல் விவாதங்கள் செய்து வருத்துபவர்களைக் கண்டு கலங்காது பொறுமை காப்பவர் ஆசிரியர். பொருள்களின் அளவைச் சந்தேகம் இல்லாமல் காட்டும் தராசு போல, சந்தேகம் தீருவதற்காக கேட்கப்பட்ட வினாவின் பொருளை விளக்குவதாலும், நடுநிலைமை மாறாது நிற்பதனாலும் தராசு ஆசிரியர்களுக்கு உவமையாக்கப்பட்டது. எல்லோராலும் விரும்பப்படுகின்ற மலர் போல் எல்லோராலும் விரும்பப்படுபவராகவும் சரியான நேரத்திலே பூ மலர்வது போலே கற்பிக்கும் நேரத்திலே முக மலர்ச்சியுடன் கற்பிப்பவரே ஆசிரியர். ஆனால் கழற்குடம், மடற்பனை, பருத்திக்குண்டிகை, முடத்தெங்கு போன்ற ஆசிரியர்களும் இருக்கவே செய்கின்றனர். ஆயினும் ஒரு மாணவன் வளர்ச்சிக்கு பெற்றோரை ஊக்கப்படுத்தி அதற்கான அறிவுரை வழங்கி அம் மாணவனை நல்நிலைக்குக் கொண்டு வருவதற்கு ஆசிரியர் ஒத்துழைப்பு அவசியமாகின்றது.

வீட்டுச்சூழல் தவிர்ந்து மற்றைய பொழுதுகளில் தமது பள்ளிப் பருவத்தில் கூடுதலான நேரத்தை பாடசாலையிலேயே ஒரு பிள்ளை கழிக்கின்றது. அந்நேரத்தில் அப்பிள்ளையைக் கண்காணிக்கும் பொறுப்பு ஆசிரியர்களிடமே ஒப்படைக்கப்படுகின்றது. குழந்தைகள் உலகத்திற்கு அவசியம். இவர்களே எதிர்கால உலகத்தை ஆளப் போகின்றவர்கள். எதிர்கால உலகை ஆளப் போகின்றவர்களை ஒழுங்கான முறையில் வழிநடத்த வேண்டிய பெரிய பொறுப்பு ஆசிரியர்களிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கின்றது. தவறு செய்யாத மனிதன் உலகத்தில் இல்லை. அந்தத் தவறை அறிந்து அவன் திருந்தி நடக்கும் போது அவன் வாழ்க்கை சிறப்புப் பெறுகின்றது. அனைத்தும் அறிந்த பெரிய மனிதர்களே தவறுகள் செய்கின்ற போது சிறிய பிள்ளைகள் எப்படித் தவறு செய்யாமல் இருப்பார்கள். பிள்ளைகள் களிமண் போன்றவர்கள். அவர்களை எப்படியும் நாம் வடிவமைக்கலாம். முறையானவர்கள் கைகளில் வளர்க்கப்படும் பிள்ளைகள் முறையாக வளர்வார்கள். தவறானவர்களால் வளர்க்கப்படும் பிள்ளைகள் முறைகேடாக வளர் வார்கள். பிள்ளைகளில் மட்டும் தவறை நாம் காணமுடியாது. ஏனெனில் அவர்கள் பூமியில் பிறப்பெடுக்கும் போது வெற்று தாளாகவே

வந்து பிறந்தார்கள். பெற்றோரும் சூழலுமே அவர்களில் பதிவுகளை ஏற்படுத்தக் காரணங்களாகின்றன.

ஆசிரியர் தொழில் மற்றைய தொழில்களைவிடப் பொறுப்பான தொழில். ஒரு சமூகத்தை உருவாக்கும் தொழில். பிள்ளைகளில் அவதானமும் அவர்களுக்குப் பாதுகாப்பும் கொடுக்க வேண்டிய பொறுப்பிலுள்ள தொழில். இத்தொழிலுள்ள ஆசிரியர்கள் தமது தொழிலை ஒரு சேவை மனப்பாங்குடன் செய்தல் வேண்டும். பொறுப்பில்லாது பிள்ளைகளுக்குக் கல்வி கற்பித்தலே எமது கடமை. அவர்கள் ஒழுக்க நடத்தைகளுக்கு நாம் காரணம் இல்லை என்று ஒரு ஆசிரியர் சொல்ல முடியாது. ஒரு கடமையில் ஒருவர் ஈடுபடும்போது அக்கடமையில் முழுக்கவனமும் எடுத்தல் வேண்டும். அக்கடமையில் வருகின்ற நன்மை தீமைகளுக்கு அவர்களே காரணங்களாகும்.

ஒரு மாணவனுக்குக் கல்வி கற்பிக்கும் போது அம்மாணவனைப் பற்றிய பூரண அறிவு அவனைக் கற்பிக்கும் ஆசிரியருக்கு இருக்க வேணடும். அரசாங்கப் பணத்தில் வாழ்ந்து கொண்டு தாமும் சோம்பே றிகளாக இருந்து கொண்டு தமது பிள்ளைகளையும் சோம்பேறி களாக வளர்க்கும் பெற்றோர்களால் சீரற்ற பழக்கவழக்கங்களுள்ள பிள்ளைகள் உருவாகுவதாக ஆசிரியர்கள் குற்றம் சாட்டுகின்றனர். தாமும் தொழிலுக்குப் போகாமல், மதுபானங்களுக்கு அடிமையாகி வீட்டிலே அடைந்து கிடக்கும் பெற்றோர்களின் பிள்ளைகள் போதைப் பொருளுக்கு அடிமைகளாவதாகவும் அப்பிள்ளைகளின் பழக்கவழக்கங்கள் மோசமான நிலையில் இருப்பதாகவும் இவை யெல்லாம் எம்மால் அவதானித்துக் கொண்டிருக்க முடியாது என்றும் சலிப்படைகின்ற எத்தனையோ ஆசிரியர்கள் நம் மத்தியில் வாழ்கின்றார்கள். பொறுப்பான பதவி வகுத்துக் கொண்டு பொறுப்பில்லாத வார்த்தைகளை நாக்கூசாது சொல்பவர்களாக இவர்கள் காணப்படுகின்றார்கள். மருத்துவர் ஒரு உயிருக்கு எப்படி உத்தரவாதமோ அதேபோல் ஒரு ஆசிரியர் ஒரு உயிரின் வாழ்வியலுக்கு அவசியமானவர். பணம் ஒன்றே குறிக்கோளாகப் பதவி வகிப்பவர்கள், இந்த நாட்டிற்குப் பாவம் செய்பவர்களாகக் கருதப்படுவார்கள். ஏனென்றால், ஒழுக்கம் மீறிய ஒரு பிள்ளை வளர்ந்து பெரியவனாக வரும்போது அப்பிள்ளை அந்நாட்டைச் சீரழிக்கும் ஒரு குடிமகனாக உருவெடுப்பான். இப்படி ஒவ்வொரு பிள்ளைகளும் வளருகின்ற போது, அந்நாட்டில் குற்றம் செய்பவர்களும், சட்டத்தை மதிக்காதவர்களும், ஒழுக்க நடவடிக்கைகளை மீறுபவர்களும் போதைவஸ்துகளுக்கு அடிமைகளாபவர்களும் அதிகரித்துக் காணப்படுவார்கள். அதன்பின் அந்நாட்டின் வீழ்ச்சி நினைத்துப் பார்க்க முடியாத அளவிற்குப் அதிகரித்துவிடும்.

'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது'' 'இளமையில் கல்வி சிலையில் எழுத்து'' என்றெல்லாம் பழமொழிகள் உண்டு. பள்ளிப்பருவத்தில் கண்ணும் கருத்துமாக வளர்க்கப்படும் பிள்ளை எதிர்காலத்தில் நல்லதொரு மாமனிதராக உருவாகுவார்கள் என்பது நிச்சயம். ■

# அறிதோறறியாமை

**இலந்தையார்**

புத்தகம் ஒன்றைப் புரட்டிநின்றேன் அதில்
போகப் போகச் சுவை ஏறியது
எத்தனை வாட்டி புரட்டிடினும் அதில்
ஏதோ புதுநயம் மீறியது

பக்கம் பக்கம் பக்கம் பாற்கடலா? அந்தப்
பாற்கடல் பக்கம் ஓர் நூற்கடலா?
அக்கம்பக்கம் இல்லா அற்புதமா? அட
அர்த்தத்தை மீறிய சொற்பதமா?

கோபத்தைக் காட்டும் ஒருசமையம் கலைக்
கோலத்தைக் காட்டும் ஒருசமையம்
தாபத்தைக் காட்டும் ஒரு சமையம் மனச்
சாந்தியைக் காட்டும் ஒருசமையம்

கற்கக் கற்கச் சுவை கூடிடுமே அதன்
கற்பனையில் இசை பாப்பாடிடுமே
பற்பல வித்தகம் பண்டிதம் யாவும் ஓர்
பாவில் அணியெனச் சூடிடுமே!

நேற்றுக் கற்றேன் அதை இன்றுகாண்பேன் என
நெஞ்சில் நினைக்குமுன் மாறிவிடும்
ஊற்றுக்கண் ஒன்று, புனல் புதிது, கதி
ஓட்டம் கணித்தல் மிகவரிது.

நானறிந்தேன் என எண்ணுகையில் புது
நாடகம் ஒன்று நடைபெறுமே!
ஆன அறிவும் அறியாமை ஆக என்
ஆற்றல் தராசில் எடைபெறுமே!

கையிலே வீணையை நானெடுத்தேன் அதில்
கைவிரல் நாட்டியம் நான்தொடுத்தேன்
பையப் பையப் பையப் பூத்திடும் நாதத்துப்
பண்ணில் புதுமை செவிமடுத்தேன்.

கேட்டு விட்டேன் என எண்ணிய யாவையும்
கேளாமல் விட்டதில் ஓர்திவலை
ஈட்டிவிட்டேன் என எண்ணிய ஞானமோ
என்றைக்கும் என்றைக்கும் ஓர்சவலை

காலை வரையும் எழிற்படத்தைத் தினம்
கண்டு களித்து மனம் குதிக்கும்
நீலக்கடலில் நெருப்பெழும் நாடகம்
நித்தம் புதிதாய் உளம்பதிக்கும்

செய்ய பட்டாடையில் வெள்ளிச் சரிகைகள்
சேர்த்தந்த அந்தி மகள் உடுத்த
நெய்த புடவைகள் ஒன்றிரண்டா நிற
நேர்த்திகள் இத்தனை கண்டதுண்டா?

புத்தகம், வீணை, விடியல், அந்தியெனப்
போந்ததா ரென்றே புரிகிறதா?
சித்தகத்தில் அவள் என்றும் புதியவள்
தேவியவள் யார், தெரிகிறதா?



## சபிக்கப்பட்டவள்

அவள் கைகள் தீண்டும்போது மலரும் உதிர்கின்றது...
அவள் கனவு காணும்போது கண் எரிகின்றது...
அவள் நாடி செல்லும்போது வீடும் இடிகின்றது...
அவள் ஓடிச் செல்லும்போது அவள் மூச்சும் பிரிகின்றது...
அவள் நம்பும்போது இறையும் மறைகின்றது...
அவள் அழுதிடும்போது நெஞ்சமும் உறைகின்றது...

சுபாஷினி கலைக்கண்ணன்

# ஃபேஸ்புக் பொண்ணு!

அதிஷா

குமாருக்கு எல்லாமே ஃபேஸ்புக்தான். வீட்டில், அலுவலகத்தில், பஸ்ஸில், டிரைனில், பாத்ரூமில் என எந்நேரமும் ஃபேஸ்புக்கிலேயே வாழ்ந்தான். ஃபேஸ் புக்கிலேயே சுடுகாடிருந்தால் அவன் செத்தபிறகு அங்கேயே புதைத்துவிடலாம் என்கிற அளவுக்கு ஃபேஸ்புக்கையும் அவனையும் பிரிக்க முடியாது!

அதிகாலையிலேயே எழுந்து குளித்து முடித்து படிய தலைவாரி, முகத்துக்கு பவுடரும் போட்டு.. கடவுளை வணங்கி, கந்த சஷ்டி கவசமும் பாடி திருநீரு பூசி கீபோர்டை தொட்டுக்கும்பிட்டுவிட்டு கணிணி முன் அமருவான் குமார். கையில் தினத்தந்தி பேப்பரை எடுத்துவைத்துக் கொள்வான். அதில் இருக்கிற ஒவ்வொரு செய்தியின் தலைப்பையும் டைப் செய்துகொள்வான். கீழே ஏதாவது மொக்கை கமென்ட் ஒன்று போட்டுவிடுவான். அதற்கு பெயர்தான் ஸ்டேடஸ்.

''அனைவருக்கும் இலவச பால் – அம்மா அறிவிப்பு #செய்தி

குடுக்கறதுதான் குடுக்கறீங்க அமலா பாலா குடுங்க ஜாலியா இருக்கும்!'' (அவன் போட்ட மொக்கை ஸ்டேடஸ் களில் ஒன்றுதான் இது)

இந்த மொக்கை கமென்ட்டை விக டன்,குமுதம்,குங்குமம்,மங்கையர்மலர் ,விஜயபாரதம் என எதிலாவது வலை பெய்யுதே, வலை தூவுதே, வலைகள் ஓய்வதில்லை மாதிரி பக்கங்களில் வெளி-யிடுவார்கள். பத்திரிகைகளில் குமாரின் கமென்டுகள் இடம் பிடித்து பிடித்து.. இதன் மூலமாக அவனுக்கு ஏகப்பட்ட ஃபேன்ஸ். அதாவது ரசிகர்கள். அதில் பாதிக்கு மேல் பெண்களாம். இவனுடைய கமென்டுகளுக்காகவே விகடன் குமுதம் வாங்கி படிக்கிற பெண்கள் கூட உண்டு என குமாரே பெருமையாக வீட்டில் சொல்லிக்கொள்வான்.

சென்னை மாநகர மக்கள் தொகையில் பாதியில் பாதி இளம்பெண்களாக இருந் தாலும் குமாரிடம் யாருமே பேசமாட்டார்கள். அவனாலும் பேச முடியாது. கூச்ச சுபாவம். அதோடு பெண்களிடம் நேருக்குநேர் அவனால் ஒரு நிமிடம்கூட பேசமுடியாது. உளறிக்கொட்டுவான். ஆனால் இந்த ஃபேஸ்புக், ட்விட்டர் முதலான லாகிரி வெப்சைட்டுகள் வந்தபிறகு நிறைய பெண் கள் இவனுக்கு கமென்ட்டு போடுவதும் சாட்டிங் செய்வதுமாகத்தான் இருந்தது. ஆனால் எந்த பெண்ணையும் 'நம்பி' பேசக்கூட முடியாது என்றும், அது பெண் பெயரில் இருக்கிற ஆணாக இருக்கலாம் என்றும் அஞ்சுவான் குமார். அதற்கு வலுவான பல காரணங்கள் இருந்தன. முக்கி முக்கி மூன்று நாள் அலுவலக வேலைகளையெல்லாம் ஒதுக்கி விட்டு கடலை போட்டு கடைசி யில் காணாமல் போன பெண்கள் நிறையபேர். அல்லது இவனோடு பேசுகிற பெண்களுக்கு வயது 60ஐ தாண்டியிருக்கும். கலிகாலம். பல்லுபோன பாட்டிகள் கூட ஃபேஸ்புக் உபயோகித்து நம்ம பிராணனை வாங்குகிறார்களே என நொந்துக் கொள்வான். இருந்தாலும் ஒரு பெண்ணாவது உஷாராகிவிடாதா என்கிற ஏக்கம் யாகூ காலத்தில் தொடங்கியது.

இணையத்தில் பெண் பெயரில் உலவு கிறவர்களில் 90% பேர் ஆண்கள், மீதி 5% பேர் வயதான பாட்டிகள் என்பது குமாரின் அவதானிப்பு. ஒன்றி ரண்டு உருப்படியான

ஃபிகர்கள் இருந்தாலும் அவர்கள் தமிழில் ஸ்டேடஸ் போடுபவர்களோடு பேசுவதில்லை.. ஆங் கிலத்தில் பீட்டர் விடுபவர்களையே நாடு கின்றனர் என நினைத்து நினைத்து.. பொருமுவான். மீறி ஏதாவது ஒன்றிரண்டு இளம்பெண்கள் அரிதாக பேசினாலும் எடுத்த எடுப்பி லேயே அண்ணா வணக்கம் என்று ஆரம்பிப்பார்கள். எவ்வளவு நாளைக் குதான் அவனும் நல்லவன் போலவே நடிப்பான்.

''ஃபேஸ்புக்கில் காதல்.. இளம் பெண் ணோடு ஜாலியாக இருந்து ஏமாற் றிய காதலன்'' மாதிரியான செய்திகளை தினத்தந்தி பேப்பரின் எட்டாவது பக்கத்தில் படித்து.. ''எப்படித்தான் இவனுங்களுக்குன்னே வந்து மாட்டுதுங் களோ.. நாம இவ்ளோ பேமஸா இருக்கோம்.. ஒரு பொண்ணாச்சும் நம்மகிட்ட பேசுதா..'' என தேம்பி தேம்பி அழுவான். நமக்கு ஆயிரக்கணக்குல பெண் நண்பர்கள் இருந்தாலும் அவர்களோடு பேசினாலும் ஒரு பிரயோஜனமுமில்லை என்று உறுதியாக நம்பினான். இதனால் எந்தப்பெண் ரசிகை இவனோடு சாட்டிங் செய்தாலும் இவன் சலிப்பாகவே பதில் சொல்வான்.

அப்படித்தான் ஒரு சுபயோக சுப தினத்தில் அவள் குமாரை சாட்டிங்கில் அழைத்தாள்.

'ஹாய்'

'ஹாய்'

'ஐயாம்.. (name), உங்களோட தீவிர வாசகி!'

'ஓஹோ'

'உங்களோட பேசணும்னு எப்பவும் நினைப்பேன்'

'பேசுங்க'

பேசும்போதே இன்னொரு விண்டோ வில் அவளுடைய புரொபைல் போய் பார்த்தான். அதிக நண்பர்களில்லை. தன்னுடைய நிறைய படங்களை அப்லோட் செய்திருந்தாள். திருமணமாகதவள். பெண் ணும் பார்க்க லட்சணமாய் மங்களகரமாய் எடுப்பாக கிளி மாதிரிதான் இருந்தாள்.

பொதுவாக இந்த ஃபேக்ஐடி பெண்கள் யாராவது நடிகையின் படத்தையோ அல்லது குழந்தைகள், அழகான பெண் ஓவியங்களையோதான் புரொபைலில் வைத்திருப்பார்கள். ஆனால் இவளோ இவளுடைய படத்தையே வைத்திருக்கிறாள் போலதான் இருந்தது. நண்பர்கள் எண்ணிக்கையும் குறைவாக இருக்கிறது. மீண்டும் படங்களை பார்க்க தொடங்கினான். ஸ்டேடஸ்களை மேய்ந்தான்.

எல்லாமே கல்லூரி நண்பர்களோடு எடுத்த படங்கள்..நிறைய கவிதை எழுதுவாள் போலிருந்தது. ஸ்டேடஸ்கள் எல்லாமே கவிதைகளாகக் கொட்டிக்கிடந்தன. அவை யெல்லாம் அவ்வளவு ஸ்வாரஸ்யம் தரவில்லை. அவளுடைய புகைப்படங்கள் ஒரிஜினலா அல்லது டூப்ளிகேட்டா என்பதே குமாருக்கு பிரச்சனையாக இருந்தது. சில சமயம் பிக்காலிபயலுக தெரிந்த பெண்களின் ஒரிஜினல் புகைப்படங்கள் இவர்களுடைய போலி ஐடிகளுக்காக பயன்படுத்துவதுண்டு.

படங்களை வைத்து பொண்ணு கோவை பாரதியார் யுனிவர்சிட்டி என்பது புரிந்தது. பின்னாலிருக்கும் டிபார்ட்மென் பெயர் அவள் மேனேஜ்மென்ட் தொடர்பாக படிப்பவள் என்பதையும் உணர்த்தியது. சாட்டிங் தொடர்ந்தது.

''நீங்க என்ன பண்றீங்க''

''நான் ஒரு கால் சென்டர்ல வேல பாக்கறேன்'

''ச்சீய்ய்.. என்னங்க நீங்க'

‘‘என்னங்க கால்சென்டர்ல வேலை பாக்குறது அவ்ளோ தப்பா..’’

‘‘சரியான தத்தியா இருப்பீங்க போல ருக்கே!’’

குமாருக்கு ஏதோ தப்பாக தோன்றியது. என்னதிது பேச ஆரம்பிச்சி நாலாவது வரிலேயேவா ஒரு பொண்ணு இப்படி பேசுமா.. நிச்சயமா இது எவனோ பையன்தான்.. பாப்போம்.. என பேச்சை தொடர்ந்தான்.

‘‘என்ன பண்றீங்க’’

‘‘நான் பாரதியார் யுனிவர்சிட்டில.. எம்பிஏ’’

‘‘எந்த இயர்’’

‘‘ஃபைனல் இயர்’’

‘‘ஓஹோ’’ (புகைப்படங்களில் இருக்கிற விஷயமேதான், உண்மையான பெண்ணா இருக்கமோ)

‘‘உங்க ஸ்டேடஸ்னா எனக்கு உசிரு.. வூட்ல எல்லாருகிட்டயும் காட்டி சிரிப்பேன்’’

‘‘ஓஹோ’’

‘‘உங்களோட போட்டோஸ் பார்த்தேன்.. ரொம்ப க்யூட்டா இருக்கீங்க ...’’

‘‘அப்படியா..?’’

‘‘உங்களோட பேசணும்னு எனக்கு ரொம்ப ஆசை’’

‘‘அதான் இப்ப பேசறீங்களே..’’

‘‘நாம பிரண்ட்ஸா இருக்கலாமா’’

‘‘இருந்துட்டு போங்க’

‘‘எனக்கும் உங்களை மாதிரியே ரொம்ப



ஃபேமஸாகணும்னு ஆசை’’

‘‘அதுக்கு நீங்க நிறைய உழைக்கணும்’’

‘‘நீங்க எந்த ஊரு’’

‘‘சென்னை’’

‘‘உங்களை நேர்ல பாக்கணும்போல இருக்கு’’

‘‘பாக்கலாமே’’

‘‘எப்படி’’

குமாருக்கு இந்த பேச்சு உற்சாகம் கொடுத்தாலும் உள்ளுக்குள்தான் ஏதோ ஒன்றுஞ் நிச்சயமாக இது ஆணாகத்தான்



இருக்க வேண்டும் என உள்மனது எச்சரித்தது. ஒருவேளை நிஜமாகவே பெண்ணாக இருந்துட்டா.. பொண்ணு வேற குஜாலா பேசுது.. மச்சான் இந்த சான்ஸு இனிமே கிடைக்குமா என குமாருடைய மனசாட்சி கிராபிக்ஸில் நிழலாக அருகில் அமர்ந்து கன்னத்தில் கைவைத்துக்கொண்டு ஜெமினிகணேசன் போலவே பேசியது.

‘‘உங்க போன் நம்பர் கிடைக்குமா..’’

‘‘ஸ்யூர்.. (PHONE NUMBER.), டியர் உங்களுடைய எண்ணை கொடுத்தால் நானே கூப்பிடுகிறேன்.. ப்ளீஸ்மா!’’

அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி. அடிப்பாவி.. கேட்டதும் கொடுத்துவிட்டாயே. ஒரு இளம்பெண் தன்னுடைய செல்-ஃபோன் எண்ணை இவ்வளவு எளிதாக கொடுத்துவிடுவாள் என குமார் நினைத்துக் கூட பார்க்கவில்லை. அந்த பெண்ணோடு சாட்டிங் பண்ண ஆரம்பித்து ஒருமணிநேரம் கூட முடியவில்லை. அதற்குள்ளாகவே இந்த அளவுக்கு முன்னேற்றமா? ஆனால் நிஜமாகவே கொடுத்துவிட்டாள். அதிலும் அந்த ‘டியர்’ அவனுடைய சமூகமே எதிர்பார்க்காதது! குமாருக்கு பதட்டமாக இருந்தது. இதயதுடிப்பு அதிகரிக்க.. வயிற்றுக்குள் என்னவோ செய்தது.

அவளுக்கு உடனடியாக ஃபோன் செய்ய பயமாக இருந்ததால் தன்னுடைய எண்ணை அவசரமாக கொடுத்துவிட்டான். இருந்தாலும் அச்சச்சோ தப்பு பண்ணிட்டோமோ என மனதுக்குள் துடித்தான்.

‘‘யார் முதல்ல கால் பண்றாங்கனு பார்ப்போமா?’’

‘‘பார்ப்போம் பார்ப்போம்’’ என்றான்.

மொபைலுக்கு முதலில் ஒரு மெசேஜ் வந்தது. ‘‘ஹாய் இட்ஸ்மீ ...’’

என்ன பதில் அனுப்பவுது என்று தெரியாமல். இவனும் ஒரு ஹாயை அனுப்பினான். அடுத்த நொடி மிஸ்ட் கால். இதயதுடிப்பு பல ஆயிரம் கிலோமீட்டர் வேகத்தில் செல்லும் ரயிலுக்கு ஒப்ப அடித்து உதறியது.

அழைக்கலாமா வேண்டாமா.. ஒரு வேளை பெண்குரலாகவே இருந்தாலும் இப்போது வருகிற கொரியன் ஃபோன்களில் ஆண்களே பெண்குரலில் பேசும் ஆப்சனெல்லாம் வருதே.. என அஞ்சினான். அந்தப்பெண்ணே அழைத்தாள், எடுத்துப்பேசினான்.

‘‘ஹல்ல்ல்லோ.. ’’ ஒரு தேன்குரல்.

‘‘ஹலோ’’

‘‘யார்னு தெரியுதா?’’ மெலிதாக ஒரு சிரிப்பு வேறு.. அடடா!

‘‘தெரியுதுங்க! சொல்லுங்க’’ தொண்டை கம்முகிறது. வேர்த்துக்

கொட்டுகிறது. ஏசியை கூட்டி வையுங்க ளேண்டா வெண்ணைங்களா!

‘‘நான்தான்.. (name) பேசறேன்’’

‘‘சொல்லுங்க.. சொல்லுங்க.. நீங்க நிஜமாவே பொண்ணுதானா’’

‘‘நேர்ல வாங்க நிரூபிச்சுக்காட்றேன்’’

‘‘அய்ய்யோ என்னங்க கோபப்படறீங்க.. ஏன்னா நிறைய பசங்க இப்படிதான் கொரியன் ஃபோன்ல பொண்ணுமாதிரி பேசி ஏமாத்துவாங்கனு டவுட்டுக்காக கேட்டேன்’’

‘‘நான் நிஜமாவே பொண்ணுதான்.. ஃபேஸ்புக்ல போட்டோஸ் பாக்கலையா.. உங்க அளவுக்கு இல்லாட்டியும் சுமாரா இருப்பேன்’’

‘‘பார்த்தேன்ங்க.. இருந்தாலும் இப்ப கூட எனக்கு நம்பிக்கையே வரல.. நிஜமாவே நீங்க பொண்ணுதானா’’

‘‘எனக்கு செம கடுப்பாகுது’’

‘‘தப்பா நினைச்சிகாதீங்க.. பொதுவா பொண்ணுங்கன்னா இன்டர்நெட்ல..’’

‘‘அதைவிடுங்கப்பா.. சாப்டாச்சா’’

‘‘சாப்டாச்சுங்க! நீங்க’’

‘‘இனிமேதான்.. பசியில்ல’’

‘‘ஏன்’’

‘‘உங்களோட பேசறேன்ல.. படபடப்பா இருந்துது..’’

‘‘என.. ஒன்னுமில்ல ஒன்னுமில்ல’’

‘‘அப்புறம்’’

‘‘அப்புறம்’’

எண்ணும் எழுத்தும் எழில்மேவக், கற்போர்தம்
கண்ணுள் கவிதைக் கமழ்ந்தாட - வண்ணமுடன்
பற்சுவை ஏடெனப் பாரில் மிளிர்கின்ற
நற்றமிழ் நெஞ்சத்தை நாடு!

இலக்குவன்

‘‘ம்ம்.. விழுப்புரம்.. எங்க இருக்கீங்க என்ன பண்ணிட்டுருக்கீங்க’’

‘‘நான் ஆபீஸ்ல இருக்கேன்ங்க.. நீங்க’’

‘‘நான் வீட்லதான் இருக்கேன்..’’

‘‘வீட்ல யாரெல்லாம்’’

‘‘அம்மா, அப்பா, தம்பி மட்டும்தான்.. இப்போதைக்கு நான்மட்டும் தனியாதான் இருக்கேன்’’

‘‘ஓஹோ’’

‘‘தனியா இருக்கேனு சொல்றேன்.. ஓஹோன்றீங்க’’

‘‘வேற என்ன சொல்றது’’

‘‘ம்ம்ம்.. ஒன்னும் சொல்ல வேணாம்’’

‘‘அப்புறம்’’

‘‘உங்களை எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு..’’

‘‘ஓஹோ’’

‘‘அப்புறம்’’

‘‘ஒன்னுமில்ல.. கொஞ்சம் வேலையா இருக்கேன், அப்புறம் பேசட்டுமா’’

‘‘ஓக்கே ஃப்ரீயாருக்கும் போது கூப்பிடுங்க!’’ எனஃபோனை கட்செய்தான் குமார்,. ஆனால் அவள் மெசேஜில் வந்தாள். ‘‘ஐ திங்க்.. ஐ லவ்..’’ என அனுப்பியிருந்தாள். பதறிப்போய்விட்டான் குமார். என்ன

செய்வதென்றே தெரியவில்லை. அவளுடைய புகைப்படத்திலிருந்த முகம் அவ்வளவு அழகு. அந்த முகம் கண்ணுக்கு முன்னால் வந்து வந்து சென்றது. அடிப்பாவிகளா இத்தனை நாளா எங்க போயிருந்தீங்க.. ஒரே ஒரு பொண்ணு.. ஒரு பொண்ணு.. நம்மள லவ் பண்ணமாட்டாளானு ஏங்கி ஏங்கி.. ச்சே.. நிச்சயமாக இப்படி ஒரு பெண் தன்னை காதலிப்பதாக சொன்னால் யாருக்குத்தான் கசக்கும். குமார் உடனடியாக ஃபோனில் அவளை அழைத்தான்,

‘‘ஹலோ’’

‘‘மெசேஜ் பார்த்தீங்களா’’

‘‘ம்ம்.. அதுக்குதான் கூப்டேன்’’

‘‘ம்ம்..’’

‘‘என்னால உன்னை லவ் பண்ண முடியாது.. ‘‘

‘‘ஏன்..’’

‘‘ஏன்னா எனக்கு கல்யாணம் ஆகிடுச்சு.. ஐயாம் மேரீட்.. ஐயாம் மேரீட்‘‘ என்று சொல்லிவிட்டு ஃபோனை கட்பண்ணிவிட்டு ரொம்ப நேரம் அழுதுகொண்டேயிருந்தான்.

‘‘அடிப்பாவிங்களா.. கல்யாணம் ஆகறதுக்கு முன்னால எவ்ளோ பேர்கிட்ட பேசிருப்பேன்.. எல்லாரும் அண்ணா அண்ணானு சொல்லிட்டு.. இப்ப வந்து லவ்வுன்றீங்களே.. என நினைத்து நினைத்து வெதும்பினான். அவள் மெசேஜ் அனுப்பியிருந்தாள். ‘‘அதுக்கென்ன’’ என அனுப்பியிருப்பாளோ.. அப்படி அனுப்பியிருந்தா எவ்ளோ நல்லாருக்கும்.. மனது பதைபதைக்க மேசேஜை பார்த்தான்.

‘‘சாரி அண்ணா!’’

என்றென்றும் அன்புடன்
அபு ஜைனப் (ஹாஜா மொஹைதீன்)



# ஐந்து பெற்றால் அரசனும் ஆண்டி

## உண்மை விளக்கம்

ஐந்து பெற்றால் அரசனும் ஆண்டி என்பது ஐந்து பெண் மக்களைப் பெறுவதைக் குறிக்கவில்லை...!!!

கீழ்கண்ட விவரங்கள் (மற்றும் விளக்கம்.)

ஐந்து பேரைக் கொண்டிருப்பவன், அரசனே ஆனாலும் கூட அவனது வாழ்க்கையே அழிவை நோக்கி போகும் என்பதுதான் உண்மையான அர்த்தம்...!!!

- ஆடம்பரமாய் வாழும் தாய்...!!!
- பொறுப்பில்லாமல் வாழும் தந்தை...!!!
- ஒழுக்கமற்றமனைவி...!!!
- ஏமாற்றுவதும் துரோகமும் செய்யக்கூடிய உடன் பிறந்தோர் மற்றும் உறவினர்கள்...!!!
- சொல் பேச்சு கேளாத பிடிவாதமுடைய பிள்ளைகள்..!!!

என்பதாகும்!

பார்வதி MCA



# சாதிக்கு சிதை மூட்டிய செங்கமலம்!

கவிதாயினி அமுதா பொற்கொடி

வேப்பமர தண் நிழலில்
உதிர்ந்த மலர் வெளிர் கம்பளம் விரிக்க
வான் சொரியும் பன்னீர் துளியால்
தேன் சுரந்து வண்டுகள் கிறங்க

மார் முலைக்குள் முகம் புதைத்த
மதலையின் மணி பால் பற்கள்
தூர் பதிந்த வெண் முத்தாய்
வேர் பிடித்து உயிர் துளிர்க்கும்

ஏர் உழவன் சால் இறைக்க
விழித்த பயிர் நீர் குடிக்க
போர்களத்துச் சிப்பாய் போல்
மார்விறைத்து தோள் உயர்த்தும்

அங்கே...

சேற்றிடை அலர்ந்த செங்கமலம்
நாற்றிடை நயனமாய் நற்றமிழ் இசைக்க
போற்றிட போட்டியாய் இளம் குதிரொன்று
காற்றுடன் கதைப்பாய் புதிர் உரைக்க

ஓரக்கண் ஓடை நாரையாய்
ஒய்யாரக் கொண்டை ஓங்காரி
ஏறிட்டுப் பாராமல் எசப் பாட்டோனை
தூண்டிலிட்டாள் கரும் கடைக்கண்ணால்

எட்டிப் பாய்ந்த பார்வை ஈட்டி
ஒட்டி உறவாடி உயிர் கூட்டி
வெட்டிவேர் வாசம் வசியம் மூட்டி
தட்டி அறைக்குள் காதலில் இணைந்தது

கன்னி முறிவு காட்டுத் தீயாய் பரவி
திண்ணைப் பேச்சிற்கு தீனியானது
மசக்கையால் மங்கை மாங்காய் கடித்தது
மாதர்குலத்திற்கு வாய்ப்பரப்பாய் போனது

விதைநெல்லுக்கு உரிமைக்காரன்
வேற்று சாதியாய் போனதால்
பதைபதைத்த விளைநில உறவுகள்
நாற்றைப் பிடிங்கிடக் கூடியது

வதைப் பேச்சிற்கு ஈடு கொடுத்து
சிதைக் கருவை நிறுத்தி வைத்தாள்
கதைப் படித்து காதல் ருசித்தவன்
சதையாய் வந்து கைப்பற்றுவான் என்று

சாதிச் சண்டைக்கு சரித்திரம் படைத்த ஊர்
ஓதிய சாத்தான் உயிர்ப்பலி கேட்க
சதியால் நலிந்த வாலிபத்தைக் கொன்று
நாதியற்ற நடுச் சந்தியில் வீசியது

பனை உரமாகி வெறித்த மனங்கள்
தினை மனிதமற்று சபித்து சாடியது
சினை சுமந்த சிற்றிளம் கதிரோ
வினை அறியாது கதறித் துடித்தது

காவல் தெய்வங்கள் வார்த்தையில் தேற்றின
காக்கிச் சட்டைகள் வழக்கை மாற்றின
காதல் தோல்வி தற்கொலையென சாற்றி
கதிக்கும் நெருப்பில் எண்ணெய் ஊற்றின

கொண்டாடி அவள் வாழ்ந்திடவில்லை
பெண்டாட்டியாய் முறையுடன் சிதைமூட்ட
மன்றாடி மண்டியிட்டு அனுமதி கேட்டாள்
மறுதலித்தன மானுடம் மரித்த மிருகங்கள்

மங்கள வாழ்வை பறிகொடுத்த
செங்கமலம் செந்நீர் கொதித்தது
கொங்கனலாய் சாதியை எரிக்க
கங்கணம் கட்டி சீறி எழுந்தாள்

பிணத்திற்கு இல்லை சாதியென உதறி
மனதிற்கினிய சவத்தை மணந்தாள்
உணர் விழுங்கிய மலைப்பாம்புகள் மலைக்க
கனற் கைம்பெண்ணாய் அவன் குடி வாழ்ந்தாள்!

# தூக்கு கயிறா வாழ்க்கை

வா இளைஞனே வா
வாழ்க்கை வாழ்வதற்கே
வீழ்வதற்கல்ல.

பத்தி எரியும் கத்திரி வெயில்
பஞ்சம் போக்க வந்த என்
பாரத தேசத்து இளைஞன் கையில்
தார் குவளை.

ஆடை தைக்கும் வேலைக்கு
ஆசையாய் வந்த இளைஞன்
ஆட்டு மந்தையில்
அடிமையாய் வாழும் நிலை.

சொந்த ஊரில் சுகமாய் திரிந்தவன்
சொர்க்கம் என்று வந்த அரபு நாட்டில்
சொக்கட்டான் பானையாய்
வெந்து மடிகின்றான்.

கனவுகள் கலைந்த வாழ்க்கை
பலரின் கதவை மூடி,
வாழ்க்கை கதவை மூடி கயிற்றில் முடிகின்றது
தூக்கு கயிற்றில் முடிகின்றது.

தூர தேசத்தில் துயரம் துடைக்கச் சென்ற
என் பாரத தேசத்து இளைஞனே
தூக்கு கயிறா வாழ்க்கை
துணிந்து நில். துவண்டு விடாதே.

அழைக்கின்றாள் பாரதத் தாய்
ஆயிரம் கைகள் கொண்டு
உன்னை அரவணைக்க
வாழ்க்கை வாழ்வதற்கே வீழ்வதற்கல்ல
வா இளைஞனே வா.



அலை அலையாய் துயரங்கள்
நாம் அசையாத ஆலமரம்
துயரம் கண்டு துவண்டுவிட
நாம் ஒன்றும் தூர தேசத்து பிள்ளைகள் அல்ல
வா இளைஞனே வா

பாரதி மீசையின் வீரம் நம் பாட்டன்
கட்ட பொம்மனின் கனல் வீசும் கோபம்
நல்ல தமிழ் புலவன் நக்கீரனின் வாதம்
தென் திசை புகழ் கண்ட
தெனாலி ராமனின் விவேகம்
இவை அனைத்தும் நம் குருதியின் ஓரத்தில்
குறையாமல் இருக்கும் போது
துயரம் கண்டு துவண்டுவிட
நாம் ஒன்றும் தூர தேசத்து பிள்ளைகள் அல்ல
வா இளைஞனே வா

தோல்விகள் படிக்கட்டுகள்
துயரங்கள் பஞ்சு மெத்தைகள்
வாழ்க்கை ஏணி ஏறி
வானம் வரை போவோம் இந்த
வையகத்தை வெல்வோம்.

வா இளைஞனே வா
தூக்கு கயிறா வாழ்க்கை
வாழ்க்கை வாழ்வதற்கே
வீழ்வதற்கல்ல
வா இளைஞனே வா.

கிருஷ்.ராமதாஸ்
[பெரம்பலூர்].

# இறுதி தீர்ப்பு...

“இது நமது சமூக அமைப்பிற்கு ஒத்து வருமா அன்வர்?”

“இந்த பிரச்சனையை சமூக அமைப்போடு ஒப்பிடுவதில் எனக்கு உடன்பாடில்ல அலி...”

“ஏன்...?”

“உணர்வு சார்ந்த பிரச்சனைகல சமூக கட்டுபாட்டுடன் ஒப்பிட்டா ரிசல்ட் குற்றம் சுமத்தப்பட்டவருக்கு பாதகமாகவே அமையும். இது நியாயமா தெரியல”.

“நீ என்ன சொல்ல வர? புரியல...”

“சமூகமும் சமூகம் சார்ந்த கட்டுபாடுகளும் மனிதர்களாகிய நாமாக வகுத்துக் கொண்டது இதை மீறும் சக்தி மனித உணர்வுக்கு உண்டு. உணர்வுகள புரிஞ்சி மதிக்கும் தன்மை நம்மால் வரையறுக்கப்பட்ட அமைப்புக்கு வேணும் இல்லேன்னா விளைவுகள் கெடுதியாகவே முடியும்...”

“அப்போ நபிலா செஞ்சது சரின்னு பஞ்சாயத்துல சொல்லப்போறியா...”

அன்வரும் அலியும் எழுந்து தன்மீது படிந்திருந்த மண்ணை தட்டிக்கொண்டார்கள். மாலை கதிரவனின் தூரத்து ஒளி கடற்கரையை அழகு படுத்தி இருந்தது. தென்றல் என்று சொல்ல முடியாத அளவிற்கு காற்று சற்று அழுத்தமாக வீசியது. இங்கும் அங்குமாக சிதறி களைந்துக்கொண்டிருந்த ஜனங்களோடு நண்பர்கள் இருவரும் நெறுக்கமாக நடக்கிறார்கள்.

“அலி, நபிலா நமக்கு உறவு பெண்ணல்ல. இருந்தும் நாளை நாம் பஞ்சாயத்தில் கலந்துக் கொள்ளப் போகிறோம். சமூக சீர் திருத்தத்திற்காக நம்மை நாமே ஓரளவு தயார் படுத்திக் கொண்ட பிறகு ஊரில் நடக்கும் எந்த பிரச்சனைக்கும் பஞ்சாயத்தார் நம்மை அழைக்கிறார்கள். நம் கருத்தை வெளிபடுத்த அது ஒரு வாய்ப்பாக அமைகிறது. நபிலா செஞ்சது சரின்னுதான் பஞ்சாயத்துல சொல்லப் போறேன்.”

*** *** ***

“பஞ்சாயத்துல என்ன சொல்வாங்கன்னு நெனக்கிற...”

“இது தவறான போக்குன்னு நபிலாக்கு தண்டனையா அபராதம் விதிப்பாங்கன்னு நெனக்கிறேன்...”

“தண்டனை கொடுப்பதற்கோ, அபராதம் விதிப்பதற்கோ இதில்

என்ன இருக்கு.. முப்பத்தி மூன்று வயது வரை நபிலாவைப் பற்றி சிந்திப்பதற்கு யாருமில்லே. வாலிப உணர்வுகளோடு பல பரிச்சை நடத்தும் வெகு ஜன தொடர்பு சாதனங்களுக்கு மத்தியில் ஒரு பெண்ணால் எவ்வளவு காலத்துக்கு ஈடு கொடுக்க முடியும். எவருமே தன்னைக் கண்டுக்கொள்ளவில்லை என்பதால் உடம்பு எதிர் பார்க்கும் உணர்வுகள் முடங்கிக் கிடக்குமா? என்ன? பாவம் நபிலா."

"இத்துனைக் காலம் பொறுத்துக் கொண்டிருந்தாள். இப்போ இயல்பு அவளை வென்றுடுச்சி..."

"அதுக்காக தன் வயதுக்கு ஒத்தவனோடு ஓடுவது முறையா அன்வர்..."

"ஓடிட்டாங்கன்னு மொட்டையா சொல் லாதே இருவரும் திருமணம் செஞ் சிக்கிட்டாங்கன்னு நம்பகமான செய்தி வந்துடுச்சி..."

"திருமணம் செஞ்சிக்கலாம்னா ஓட லாம் என்று சொல்லவரியா..."

"நான் சொல்ல வரத புரிஞ்சிக்க அலி. அக்கறையோடு இந்த சமூகம் நபிலாக்கு ஒரு வாழ்க்கைய அமைத்துக் கொடுத்திருந்தா நம்முடைய இந்த சந்திப்பும் நாளைய பஞ் சாயத்தும் தேவையில்லாம போயிருக்கும். சமூக அமைப்பு – சமூக அமைப்புன்னு விவாதிக்கிறோம். இது ஒருவர் மீது ஒருவர் அக்கரைக் கொள்வதா இருக்க வேண்டும்.. மிருகங்களும், பறவைகளும் கூட கூட்ட மாக வாழ்கின்றன. அதை யாரும் சமூக அமைப்பு என்று கூறமாட்டோம்."

"நாம் பேசும் சமூக அமைப்புக்கூட இதற்கு ஒத்துதான் இருக்கு. பிறர் மீது



## கேள்வியும், சீதா G பதிலும்!

? நீங்கள் ஏன் கவிதைகள் மட்டுமே எழுதுகிறீர்கள்? பெண்கள் கவிதைக்கு மட்டும் செம்ம, சூப்பர், நைஸ், அபாரம்னு பின்னூட்டம் வருகிறதே அதை பற்றி கருத்தென்ன ஏன் கதை கட்டுரை காமெடி இப்படி வெரைட்டியா எழுத கூடாது.

! நாங்கள்தான் வீதிக்கு வீதி கதையாய், ஊருக்கு ஊரு அறிவுரைகள் அடங்கிய கட்டுரையாய், கணவன் மனைவி காமெடிகளில் அடி கொடுக்கும் மூட்டாள் கதாபாத்திரங்களாய் நிரம்பி வழிகிறோமே. அதிரடி திருப்பங்கள் நிறைந்த, நுண்ணிய உணர்வுகள் மிதக்கும் தருணங்கள் மிகுந்த கவிதைகளைதான் காணவில்லை ஆகையால்தான் கனவுகளை வலிகளை எதிர்பார்ப்புகளை சாட்டைகளை கவிதைகளாய் எழுதி குவிக்கிறோம். பின்னூட்டங்கள் பற்றி கவலையில்லை எதிர்பார்ப்புகள் நிறைவேறாத பின்னூட்டதாரர்கள் போலி முகவரியில் வந்து முகத்தை கிழித்து காட்டி விடுவார்கள்.

---

*அக்கறைக் கொள்ளாத மனப்போக்கு இருக்கும் வரை நாம் கட்டுப்பாடாக நினைக்கும் காரியங்களுக்கு எதிர் புரட்சி நடக்கத்தான் செய்யும்...”*

*“நபிலாவின் இந்த போக்குக்கு சமூகம் தான் காரணமா...”*

*“நிச்சயமாக...”*

*“அது எப்படி சொல்ல முடியும், ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் பல பிரச்சனைகள் குறுக்கிடும் போது பிறர் மீது அக்கரைக் கொள்ளாததை எப்படி குற்றம் என்று சொல்ல முடியும்.”*

*“பிரச்சினைகளை காரணங் காட்டி நீ சமூகத்திற்காக வாதாடினால் பிறகு பஞ்சாயத்து எதற்கு.. குற்றங்கள் ஏற்படுவதற்கான காரணங்களை கண்டறிய மாட்டோம். ஆனால் தண்டனை மட்டும் கொடுப்போம் என்பது தான் நீதியா... நீயும் நானும் கூட பிரச்சனைக்கு அப்பார்பட்டவர்களல்ல, ஒன்றாக படித்தோம் ஒன்றாக வேலை தேடி அலைகிறோம், கனமான ஏமாற்றத்துடன் திரும்பும் நாட்களில் நமது பிரச்சனை எவ்வளவு ஆழமானது என்பதை உணர்கிறோம். இருப்பினும் நபிலா என்ற ஏதோ ஒரு பெண் மீது அக்கரைக் கொள்கிறோம்.”*

*** *** ***

*“இதுதான் சமூகத்தின் மீதான அக்கரை. இதுதான் மனிதத்துவம் அலி..”*

*“நாளை நபிலா நம்பியவனால் கை விடப்பட்டால்....”*

*“அப்படி நடக்கக்கூடாது என்று பிரார்த்திப்போம்.”*

*“மீறி நடந்தால்...”*

*“நாம் தான் அவளை அரவணைக்க வேண்டும் கடந்தக்கால சமூக பொருப்பின்மைக்கு அதுதான் பிராயச் சித்தமாக அமையும்.”*

*“நாளை பஞ்சாயத்தில்...”*

*“என் கருத்தை வலியுறுத்தி பேசுவேன்.”*

*இருவரும் விடைப்பெற்று பிரியும் போது இருட்டி இருந்தது. தூரத்தில் மின்னும் மின் விளக்குகளை அலி நோக்கினான் எங்கோ தன் வாழ்க்கைக்கு விளக்கேற்றிக் கொண்ட நபிலா நினைவுக்கு வந்தாள். அன்வரின் பக்கம் சிந்தனை திரும்பியது. மனிதத்துவத்தின் மீத அக்கரையுள்ள நண்பன். இளைஞர்கள் இப்படி உருவானால் நபிலாக்கள் காலம் கடத்த வேண்டியதில்லை ஓட வேண்டியதில்லை என்று தோன்றியது.*

*நாளை பஞ்சாயத்தார்கள் சிந்திப்பார்கள்.*

# தமிழ்நெஞ்சம்

கனிவான கவிதந்த தமிழ்நெஞ்சம் கண்டு
கருநெல்லிக் கனிதந்த தமிழ்நெஞ்சம் உண்டு
சினம்மீறி அறம்பாடும் தமிழ்நெஞ்சம் கண்டும்
சிதையேறி அதையுண்ட தமிழ்நெஞ்சம் உண்டு
தனைநாடி வருவோரின் தமிழ்நெஞ்சம் கண்டு
தலைதந்து முவக்கின்ற தமிழ்நெஞ்சம் உண்டு
புனல்வாத குருகூரார் தமிழ்நெஞ்சம் கொண்டு
பொருதிட்ட திருக்கோளூர் தமிழ்நெஞ்சம் உண்டு

அணுவென்றைச் சதகூறாய்த் தமிழ்நெஞ்சம் துளைக்கும்
அதைக்கூடக் கோணென்று தமிழ்நெஞ்சம் அழைக்கும்
நுணுக்கிப்பார் குவிநுட்பம் தமிழ்நெஞ்சம் விளக்கும்
நுனிப்புல்லில் பனைகாட்டும் பனிகாட்டி வியக்கும்
கணக்குக்கே சுழிதந்து தமிழ்நெஞ்சம் தொடக்கும்
கணித்துப்பார் ஏழைந்து சுழியெண்”அவ் வியத்தம்“
அணுகாமுன் செவ்வாயை செவ்வாயென் றழைக்கும்
அதன்வண்ணம் சிவப்பென்று தமிழ்நெஞ்சம் குறிக்கும்

ஙப்போல வளையென்று தமிழ்நெஞ்சம் பொழியும்
ஞாலத்தில் இதைஎந்த மொழிசொல்ல முடியும்?
அப்பப்பா அஃகென்று தமிழ்நெஞ்சம் படிக்கும்
அஃகுப்போல் எழுத்தொன்று வேறெங்கு கிடைக்கும்?
ஒப்பிட்டுக் குற்றென்றும் முற்றென்றும் பிரிக்கும்
ஒலிவேறு பாடென்று தமிழ்நெஞ்சம் விரிக்கும்
ஒப்பற்ற மொழியாக தமிழென்றும் இருக்கும்
உயிர்மெய்யை உயிர்மெய்யுள் தமிழ்நெஞ்சம் இணைக்கும்!

சு.அய்யப்பன், கோவில்பட்டி

(அவ் வியத்தம்=1,00, 000, 000, 000, 000, 000, 000, 000,000, 000, 000, 000)



# கண்மணியே நீவாழி!

*கவிஞர் அ. முத்துசாமி*

மணமுடித்த மங்கையே நீவாழி!
மங்கலம்நிறை தங்கையே நீவாழி!
கனவுயாவும் நிறைவேறி நீமகிழ
காட்சிதரும் கண்மணியே நீவாழி!

புகுந்தவீடு புகழ்பெற்றல் போலுனது
பிறந்தவீடு மனமகிழவும் செய்திடணும்,
கண்ணிறைந்த கணவனவன் செயல்களிலே
கட்டாயம் உன்விருப்பம் கலந்திடணும்.

மாமனாரும் மாமியாரும் போற்றுகின்ற
மருமகளாய் எந்நாளும் திகழ்ந்திடணும்,
குடும்பத்தின் பொன்விளக்காய் நீயிருந்து
கோவிலாக வீட்டைநீ மாற்றிடணும்.

நாத்தனாரின் உறவுகளை வெறுத்திடாமல்
நீஅவர்க்கு உதவியாக இருந்திடணும்,
பெற்றவர்கள் உனதன்பில் மனமகிழ்ந்து
பேரின்பம் கண்டவரும் உணர்ந்திடணும்.

புன்முறுவல் பூக்கின்ற பொன்முகத்தில்
புத்தம்புதுப் பிரகாசம் பொழிந்திடணும்,
கண்மையோ கண்ணீரில் கரைந்திடாமல்
கவலைதனை மறைத்துநீயும் வாழ்ந்திடணும்.

பொறுப்புள்ள தலைவியாக நீபெற்ற
புதல்வர்களை நன்முறையில் வளர்த்திடணும்,
வெறுப்புதனை எவர்மீதும் காட்டிடாமல்
விருப்பமுடன் குடும்பத்தை நடத்திடணும்.

# காதல் ஓவியன்...

தூரிகைக்கு உயிர்கொடுக்க
முடிந்தது என் வண்ணத்தால்
மட்டும் தான்.

உறவிற்கு உயிர்கொடுக்க
முடிந்தது உன் சம்மதத்தால்
மட்டும் தான்.

நெல்லை உலகம்மாள்

# அவளன்பு

*கணேசம்மா, மலேசியா*

கண்டாங்கி புடவைக் கட்டி
மச்சானுக்கு உணவு கொண்டு
வயலுக்கு சென்றாள்!
மீன் குழம்பு சோற்றுடன்
தன் அன்பையும் கலந்தேப்
பரிமாறினாள்...



# பலன்



அர்சுணனும் கிருஷ்ணனும் ஒருமுறை ஊருக்கு வெளியில் உலாவிக் கொண்டிருந்தபோது வழியில் மரத்தடியில் உட்கார்ந்திருந்த ஒரு வயோதிகர் ஏதாவது தர்மம் செய்யும் படி கேட்டார்.

அர்சுணன் மனமிரங்கி 1000 பொற்காசுக்களை கொடுக்க, ஆகா இது நம் குடும்பத்திற்கு ஒரு வருடத்திற்காவது உபயோகப்படுமே என்றெண்ணி சந்தோசத்தோடு வீட்டிற்கு எடுத்து சென்றார் வயோதிகர்.

இதை தொலைவிலிருந்து கவனித்த கள்வனொருவன் களவாடி சென்று விட்டான்.

சுமார் 10 தினங்கள் கழிந்து மீண்டும் அவ் வழியே வந்த அர்சுணன் இதை கேள்விப்பட்டு, இந்த முறை விலையுயர்ந்த நவரத்தினக் கல்லை கொடுத்து இதையாவது பத்திரமாக வைத்திருந்து வாழ்க்கையை சுகமாக களியுங்கள் என்றான்.

இந்தமுறை மிகக் கவனத்துடன் அதை வீட்டிற்கு கொண்டு சென்றவன், தன் மனைவி பிள்ளைகளிடம் கூட சொல்லாமல் பரணில் இருந்த ஒரு பானையில் போட்டு வைத்து அவ்வப்போது வீட்டில் யாருமில்லா சமயம் மட்டும் எடுத்துப் பார்த்துக் கொண்டு கவனமாக பாதுகாத்து வந்தான்.

இதையறியாத அவன் மனைவி ஒருமுறை பரணிலிருந்த அந்த பானையே எடுத்துக் கொண்டு அருகிலிருந்த ஆற்றிற்கு நீரெடுக்கச் சென்றாள். அப்போது பானையை கழுவும் போது அது ஆற்றில் தவறி விழுந்து விட்டது.

அவள் நீரெடுத்து வீட்டில் நுழையும் சமயம் வெளியே சென்ற வயோதிகர் அந்த குடத்தை பார்த்து அதிர்ச்சியாகி, “எங்கே அதிலிருந்த கல்?” என்று மனைவியை கேட்டான்.

ஏது மறியாத மனைவி நடந்ததை கூற, உடனே ஆற்றிற்கு சென்ற அவன் அன்றிரவு வரை தேடியும் பலனின்றி வீட்டிற்கு சோகத்துடன் திரும்பினான்.

**வன்மம் கொள்ளாத மனதும் வேண்டும் ...**
**வன்முறைகளற்ற செயலும் வேண்டும் ...**

**J. பானு ஹாருன்**

சிலதினங்கள் கழித்து மீண்டும் கண்ணனும் அர்சுனனும் அவனைப் பார்க்கும் போது, அவன் நடந்ததைக் கூற அர்சுனன் கண்ணனிடம் இவன் அதிர்ஷ்டமே இல்லாதவன் என்று கூறினார்.

அதை ஆமோதித்த கண்ணனும் இந்த முறை நீ இவனுக்கு 2 வராகன்களை மட்டும் கொடு என்றார்.

ஆச்சர்யப்பட்டான் அர்சுனன். ஆனாலும் 2 காசுகள் மட்டும் கொடுத்து அனுப்பி விட்டு கண்ணனைப் பார்த்து, "இதென்ன விந்தை. வெறும் 2 காசுகள் மட்டும் அவனுக்கு என்ன சந்தோசத்தை கொடுத்துவிடும்?" எனக் கேட்டான்.

"எனக்கும் தெரியவில்லை?"

"என்னதான் நடக்கிறது பார்க்கலாம் வா, அவன் பின்னால் செல்லலாம்," எனக்கூறி இருவரும் பின் தொடர்ந்தனர்.

அவன் வீட்டடிற்குச் செல்லும் வழியில் மீனவன் ஒருவன் உயிருடன் தான் பிடித்து வைத்திருந்த இரண்டு மீன்களை வாங்கி கொள்கிறாயா என கேட்டான்?

உடனே தனக்குள் யோசித்த இவன் இந்த 2 சாதாரண காசு எப்படியும் தன் குடும்பத்திற்கு ஒருவேளை பசியை கூட போக்காது என எண்ணி அந்த மீன்களை விலை கொடுத்து வாங்கி ஆற்றிலே திரும்ப விட வேண்டும் என்ற முடிவுடன் வாங்கி விட்டான்.

அப்படி வாங்கியதில் ஒன்றை ஆற்றில் விட்டு விட்டு அடுத்ததை விடும் முன் அது சுவாசிக்க முடியாமல் அதன் தொண்டையில் ஏதோ சிக்கியிருப்பதை பார்த்து மீனின் வாயில் விரலை விட்டு சிக்கியிருந்ததை எடுத்தான்.

அதைப் பார்த்ததும் பிரமிப்பின் உச்சத்திற்கே சென்றான். ஆம், அவன் மனைவி ஆற்றில் தவற விட்ட விலையுயர்ந்த கல் தான் அது.

உடனே சந்தோசத்தின் மிகுதியால் ''என்னிடமே சிக்கி விட்டது'' என்று கூச்சலிட்டான்.

அதே நேரம் யதார்த்தமாக அவ்வழியே, இவனிடம் கொள்ளையடித்த கள்வன் வர அவன் திடுக்கிட்டு, தன்னைத்தான் கூறுகிறான் என்றெண்ணித் திரும்ப ஓடுகையில் கண்ணனும் அர்ச்சுணனும் அவனைப் பிடித்து விட்டனர்.

அவன் அனைத்தையும் ஒப்புக்கொண்டு இவனிடம் களவாடியது மற்றுமல்லாது மற்ற காசுகள் மற்றும் அணிகலன்கள் அனைத்தையும் கொடுத்து விட்டான்.

அதை அனைத்தையும் வயோதிகருக்கு கொடுத்து அனுப்பிவிட்டு, ஆச்சர்யப் பட்ட அர்சுணன் கண்ணனிடம் ''இது எப்படி சாத்தியம்?'' எனக் கேட்க... கண்ணனும் சிரித்துக்கொண்டே.

"இதே வயோதிகர் நீ முன்பு கொடுத்ததை தனக்கும் தன் குடும்பத்துக்கு மட்டுமே எடுத்து செல்ல வேண்டும் என எண்ணினார்.

அடுத்து நீ கொடுத்த விலையுயர்ந்த கல்லை தானும் உபயோகிக்காமல் மற்றவருக்கும் பயன்படாமல் ஒளித்து வைத்திருந்தார். ஆகவே அவையிரண்டும் அவரிடம் தங்கவில்லை.

"ஆனால், இப்போதோ தன்னிடமிருந்தது மிகக்குறைவானது என்பது தெரிந்தும் தனக்கு உதவாவிட்டாலும் இன்னொரு உயிராவது வாழட்டுமே என தன்னலமில்லாது நினைத்ததால், அவனை விட்டு சென்ற செல்வம் அவனுக்கே கிடைத்தது. இதில் எனது செயல் ஏதுமில்லை" எனக் கூறினார்.

இதைப் போலத்தான் ஒவ்வொருவரும் பலனை எதிர்பாராமல் செய்கின்ற செயல்கள் உரிய நேரத்தில் பயனளிக்கும்...!!

நெல்லை உலகம்மாள்

# வேர்களை வெறுக்கும் விழுதுகள்!



கால் நூற்றாண்டுக்கு முன்னர் பெண் சிசுக்கொலைகள் நடந்து ஒட்டுமொத்த இந்தியாவையும் உலுக்கிய தமிழ்நாட்டில் இன்று பெற்றோர் கொலைகள் நடக்கத் துவங்கியிருக்கின்றன. தமிழ்நாட்டின் முதியோர் பராமரிப்பின் மோசமான நிலைமையே இத்தகைய மௌனக்கொலைகள்.

100 கிராமங்களில் மட்டும் 200 பேர் கொலை?

மதுரையை ஒட்டிய உசிலம்பட்டி பகுதியில் செயல்படும் தொண்டு நிறுவனமான யுரைஸ் என்கிற நிறுவனம் எடுத்த கணக்கெடுப்பின்படி சுமார் நூறு கிராமங்களில் மட்டும் 150 முதல் 200 முதியோர் கொலைகள் நடந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

இந்த நிலைமை வெறும் மதுரைப் பிராந்தியத்தில் மட்டும் நடக்கவில்லை. தமிழ்நாட்டின் வேறு இடங்களிலும் இத்தகைய பெற்றோர் கொலைகள் நடந்திருக்கின்றன. இன்றும் நடப்பதாகவே தகவல்கள் தெரிவிக்கின்றன. இத்தகைய சம்பவங்களில் பெரும்பாலும் பெற்றோர்கள் அவர்களின் சொந்த பிள்ளைகளாலேயே கொல்லப்படுகிறார்கள்.

இத்தகைய முதியோர் கொலைகள் நடப்பது சம்பந்தப்பட்ட ஊரில் அல்லது பகுதியில் எல்லோருக்கும் தெரிந்தே இருக்கிறது. ஆனால் யாரும் அதுகுறித்து பேசுவதில்லை. அப்படியே பேசினாலும் அது சட்டப்படி தண்டிக்கப்படுவதும் இல்லை. போதுமான சட்டரீதியிலான சாட்சியங்கள் இல்லை என்று கூறி எல்லோரும் இந்த பிரச்சனையை ஒன்று புறந்தள்ளப் பார்க்கிறார்கள் அல்லது வேகவேகமாக கடந்து செல்ல முயல்கிறார்கள்.

எல்லா வீடுகளிலும் வேண்டப்படாத எல்லா முதியவர்களும் கொல்லப்படுவதும் இல்லை. பலர் தற்கொலையை நோக்கி படிப்படியாக தள்ளப்படுகிறார்கள். இன்னும் சிலர் பெற்றோரை முதியோர் இல்லத்தில் பலவந்தமாக கொண்டுபோய் சேர்த்து விடுகிறார்கள். சில சமயம் அந்த முதியவர்களுக்குத் தெரியாமலே கூட. இன்னும் பல சந்தர்ப்பங்களில் பிள்ளைகளின் புறக்கணிப்பு மற்றும் வன்முறைகளை பொருக்க முடியாமல் முதியவர்களில் பலர் தாமாகவே முதியோர் இல்லம் தேடி

ஓடும் சூழலும் நிலவுகிறது.

ஆனால் முதியோர் இல்லங்களின் பராமரிப்பு சூழலோ அப்படி ஒன்றும் நல்லபடியாக இல்லை. குறிப்பாக இலவச முதியோர் இல்லங்களின் நிலைமை மோசமாகவே இருக்கிறது. கௌரவமான சிறைக்கூடம் என்று வர்ணிக்கும் அளவுக்குத்தான் சில முதியோர் இல்லங்களின் இருப்பு இருக்கிறது.

இப்படியான முதியோர் இல்லம் தேடிச் செல்ல விரும்பாத அல்லது முடியாதவர்கள் அல்லது முதியோர் இல்லத்தில் இடம் கிடைக்காதவர்கள் தமது பிள்ளைகளுடன் தொடர்ந்து இருக்க நேரும்போது செய்ய வேண்டிய விட்டுக்கொடுப்புக்கள் ஏராளம். குறைந்தபட்சத் தேவையான மூன்றுவேளை சாப்பாடு கூட பல முதியவர்களுக்கு ஒழுங்காக கொடுக்கப்படுவதில்லை.

இப்படியாக, 21 ஆம் நூற்றாண்டில் தமிழ்நாடு எதிர்கொள்ளும் மிகப்பெரிய சமூக அவலமாக மாறிக்கொண்டிருக்கும் முதியோர் பராமரிப்புக்கு பின்னால் வலுவான பொருளாதார காரணிகளும் இருக்கின்றன.

உதாரணமாக தமிழக அரசு மாதந்தோரும் ஏழை முதியோர் பராமரிப்புக்காக ஆளுக்கு ஆயிரம் ரூபாய் உதவித்தொகை தருகிறது. இந்த உதவித்தொகையை தமிழ்நாட்டின் 75 லட்சம் முதியவர்களுக்கும் விஸ்தரிக்க வேண்டும் என்று பலர் கோரிக்கை எழுப்புகிறார்கள். ஆனால் அப்படி செய்யவேண்டுமானால் தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த நிதியில் 10 சதவீதம் அதற்கு மட்டுமே செலவாகும். அவ்வளவு நிதிவசதி தமிழக அரசிடம் இல்லை. விளைவு பல முதியோர்களுக்கு இந்த நிதிஉதவி கிடைக்கவில்லை.

அதேபோல முதியோருக்குத் தேவைப்படும் சிறப்பு மருத்துவ வசதிகளும் தமிழ்நாட்டில் போதுமானதாக இல்லை. இருப்பவையும் தமிழ்நாட்டின் நகர்ப்புறங்களில் மட்டுமே இருக்கின்றன. கிராமப்புற முதியவர்கள் தான் மோசமாக பாதிக்கப்படுகிறார்கள்.

பெண் முதுமை என்னும் பெருஞ்சுமை.

இதில் கூடுதலான கவலை தரும் அம்சம் என்னவென்றால், ஆதரவு தேவைப்படும் முதியோரில் ஆண்களை விட பெண்களின் எண்ணிக்கையே அதிகம். இத்தகைய வயதான மூதாட்டிகள் பலருக்கு ஓய்வூதியமும் இல்லாமல், உடல் நலமும் குறைந்த நிலையில் தனிமை சூழந்த முதுமை பெரும் பாரமாக இருந்து அவர்களை அழுத்துகிறது.

முதுமை, தனிமை, இயலாமை, வறுமை என தமிழ்நாட்டின் முதியோர் பராமரிப்பில் நிலவும் வெறுமையும் விரக்தியும் சூழ்ந்த அந்திமவாழ்வின் அவலங்களுக்கு ஒரு முற்றுப்புள்ளி வருமா?

# சரிதைகள்

கருப்புக் கவிதைகளாய்
நகர்ந்துக் கொண்டிருக்கிறது
சில படிமங்கள்
சில காலம் வரை

இன்று இந்தக் கனம்
நான் வாழ்ந்து கொண்டிருக்கிறேன்
என்பதை விட
ஓர் வாசகமாய்
எது மெய்ப்படும்

தவணைகள் தேர்வுக்குள்
மறைகின்றன
விடைகள் கருப்புப் பாதையில்
ஒளிகள் தேடி பயணிக்கின்றன
எத்தனை ஆளுமைகள்
தன் வசம் இருப்பினும்
புதிருக்குள்ளேயே இன்னும்
வாழ்க்கை

தண்ணீராய் பாத்திரம்
ஏற்கும் வடிவங்களில்
இசைந்துப் போகின்றன
தன்னை அலங்கரிக்கும்
உயிர்கள்

ஆதியும் வாழ்ந்த நினைவில்லை
அந்தமும் இன்னும்
அறியவில்லை
எனும் மறதிகளுடன்
கருவறை தொடங்கி
கல்லறை வரையான
பயணத்திற்கு கால
அவகாசம் நிர்ணயமில்லை
அறியப்படாத ஏடுகளுக்குள்
மர்மமாகின்றன பல எழுத்துக்கள்

விதியெனும் பெயருக்குள்
அத்தனையும் திணிக்கும்
ஒரு ஒளி மட்டும்
மங்களாக உடன் வருகிறது
தேற்றிக் கொள்ள சிறு
தெம்பும் தரவல்ல
உறுதுணை இது

எங்கோ தொலைவினில்
இரு அண்டப் பெருவெளிகள்
தன்னை அறிமுகம் செய்கின்றன
சுவர்க்கம் நரகம் என்று
நன்மைகள் தீமைகள் எனும்
தூரிகைகள் தன்னை
தீட்ட அனுமதிக்கின்றன
ஆன்மாக்கள்
விடையும் தன் கையில்
என்பதைத்தான் புரிந்தவர்கள்
எத்தனைப் பேர் உளர்

M.F.சஹீகா

# முதல் மனுசி

அண்ணா கண்ணன்

கவிதை, எப்போதாவது தோன்றுவது என்று கருத்தாக்கத்தைத் தள்ளிவைப்போம். நமது மனம் எந்த உணர்வுடனாவது லயம் சேரும் போது அந்த உணர்வுக்கேற்ப கவிதை பிறந்து விடுகிறது. நமது மனம், நினைத்த மாத்திரத்தில் லயம் சேருமானால் நம்மால் நினைத்த நொடியில் கவிதை படைக்க முடியும்.

கவிதை என்ற பெயரில் நிறைய வெளி வருகின்றன. அவை கவிதைகளா என்பது சிந்தனைக்குரியது. ஆனால், அதிக எண்ணிக்கையில் கவிதை எழுதும்போது கவிதைப் போக்குகள் சிலவற்றை நாம் காணலாம். சுமாராக எழுதத் தொடங்கிப் பட்டை தீட்டப்பெற்று மிகச் சிறப்பான கவிதைகள் எழுதுவோர் உண்டு. இது, ஏறுவரிசை. மிகச் சிறப்பாக எழுதத் தொடங்கி, அடுத்தடுத்த படைப்புகளில் அந்தச் சிறப்பைத் தொட முடியாமல் சுமாராகத் தேய்வோர் உண்டு. இது, இறங்குவரிசை. ஒருவகைக் கட்டமைப்பில் ஒரே மாதிரி அலைவரிசையில் சிலர் எழுதுவர். இது, தொடர்வரிசை. பொதுவாக மோசமாகவும் திடீரென நல்ல கவிதைகளும் சிலர் எழுதுவதுண்டு. இது, லாட்டரிச் சீட்டுப்போல. எப்போதாவது தான் பரிசு விழும். இதற்குக் கவிஞரின் திறமை காரணமில்லை. வசமாக வந்து மாட்டிக்கொள்ளும் சொற்களே காரணம். இந்த வகைகளில் இளம்பிறையை முதல் வகையில் சேர்க்கலாம்.

'மவுனக்கூடு', 'நிசப்தம்', 'முதல் மனுசி' என மூன்று கவிதைத் தொகுப்புகளைப் படைத்தவர். திருவாரூரை அடுத்துள்ள சாட்டியக்குடியில் பிறந்தவர். இப்போது சென்னையில் ஆசிரியர் பணியாற்றுகிறார். இயற்பெயர், ச.பஞ்சவர்ணம்.

மென்மையான உணர்வுகளை மிகச் சிறப்பாகக் கையாளும் இவர், கிராமத்தில் பிறந்ததால் மண் வாசனையுடன் எழுதுகிறார். நாட்டுப்புற உள்ளடக்கம் இவரிடம், கூர்தீட்டிய கத்தியைப் போல் மின்னுகிறது. பழக்கமான களத்தில் வசதியான ஆயுதம் வாய்த்துவிட்டால் வீரத்திற்குக் குறைவேது?


சோப்புப்போட்டுக் குளிக்கவச்சா
செவந்திடுவேன் பொண்ணுயின்னு
தோப்புப் புழுதிக்குள்ள
தூங்கவிட்டுப் போனவளே..
பரிட்சக்கி கட்டவேணும்
பணங்குடும்மாயின்னு கேட்டா
படிக்கவச்சி எப்பேர்ப்பட்ட
பாவத்த நான் செஞ்சுபுட்டேன்யென
அழுது அழுது ஒரு
அஞ்சு ரூபா தந்தவளே..

என்னப்பெத்த எந்தாயே உம்
பள்ளிக் கூடத்து மக
பாட்டுக்கட்டிப் பாடுறேம்மா — நான்
எங்க திரிஞ்சாலும் — என்
இதயத்துல வாழுகிற உனக்குத்தான் மொதப்பாட்டு — என்
உயிர்பாடும் தாலாட்டும்..!

எனத் தன் அம்மாவைப் பாடும்போது உயிரை உருக்குகிறார்.

“அப்பாவுக்கும்ஞ் அவரது நண்பர் களுக்கும் சமர்ப்பணம்’ என்று தன் “நிசப்தம்’ நூலைக் காணிக்கையாக்குகிறார். அப்பாவைப் பற்றிய இவரின் வரிகள், நம்மைக் கண்ணீர் விட வைப்பவை.

என் கருப்பு நிறத்தை
வீடே சேர்ந்து
கிண்டல் செய்யும்போதெல்லாம்
“என் தாயார் போல
கருத்தான என் மக’ யென
ஆறுதல் தந்தாய்...
பத்தடி முன்னால்விட்டு
பின்னால்கூட வரும்
யாரிடமாவது
சொல்லிக்கொண்டு வருவாய்
“என் மக டீச்சருக்குப் படிக்குது
ரேடியோவுலயெல்லாம் பேசியிருக்கு...’
கொடுத்த பொருளைத்
திருப்பிக்கேட்க
உன்னளவிற்குக்
கூச்சப்பட்டவர்களை
நான் பார்த்ததே இல்லை..
சொத்து குறித்து
யாராவது விசாரித்தால்
“என் பொம்பள மக்கதான்
என் சொத்து...
நான் செத்துப்போனால்
அவர்களெல்லாம்
கூடி அழுவுதுதான்
என் சுகம்’ யென
உருக்கமான கவிதை சொல்வாய்




கள்ளங்கபடமற்ற அந்த ஏழைத் தந்தையால்தான் இந்தக் கவிதை நிமிர்ந்து நிற்கிறது. இப்படிப்பட்ட தந்தையும் இந்தக் கவிதையும் தமிழ்நாட்டின் பெருமைகளுள் ஒன்றாகக் கருதத்தக்கவை.

அல்லுபகல் உழைப்பவள
அடிக்ககைய நீட்டாதய்யா

சீக்கிரமா சமச்சித் தாரேன்
“சிடு சிடு”னு பேசாதய்யா..

என்ற கவிதை, வன்முறைக்கு எதிரான தர்மாவேசமாக இல்லாமல் கெஞ்சும் தொனியில் இருப்பது, சிந்தனைப் பழைமையை வெளிப்படுத்துகிறது.

“அப்பாவின் கையெழுத்து!’ என்ற கவிதை, ஓர் அற்புதமான சிறுகதையாக விரிகிறது. மகளின் மதிப்பெண் அட்டையில் ரேகை வைப்பதிலிருந்து மாறி, கையொப்பம் இட விரும்பும் வழிவிட்டான் மயன் சன்னாசி, மிகச் சிறப்பாகப் பதிவாகியுள்ளார்.

“நீ எழுத மறுக்கும் எனதழகு சில’ என்ற தலைப்பில் இவர் பட்டியலிடுவது முக்கியமானது.

இளம்பிறையின் காதல் கவிதைகள், வலியும் ரணமும் மிக்கவை இஷ்ட தேவதைகளின் வாழ்த்துகளையும் துஷ்ட தேவதைகளின் சாபங்களையும் இணைந்தே பெற்றிருக்கிறது, காதல்.

“இறந்த பின்பும்
ஒரே குழியில் புதைபடவேண்டும்”
என்றெல்லாம்
பேசிக்கொண்டவர்கள் நாம்.
காலம்
கற்றுத் தந்திருக்கிறது பார்த்தாயா..?
பார்த்தும்... எது குறித்தும்
பேசாமல் பிரிவதற்கு.

காலந்தோறும் காதல், தனி மனிதர்களுக்கு இழப்பையும் இலக்கியத்திற்குச் செழுமையையும் அளித்துவருகிறது. இளம்பிறை அதற்கு இன்னொரு சாட்சியம்.

கிராமத்து உணர்வுகளையும் காதலையும் தவிர உலகின் பல்வேறு பக்கங்களையும் இளம்பிறை தொட்டுச் செல்கிறார்.

“சில்க் சுமிதா என்கிற விஜயலெட்சுமிக்காக..’ என்ற கவிதையில்

நான் அழுகிறேன் சுமிதா.
உன்னோடு ஆடியவரெல்லாம்
“குடும்பம்...குழந்தை’ யென
கௌரவப் பிரஜைகளாய்..
நீ மட்டும் ஏன் பெண்ணே
மண்ணோடு?
என ஆற்றாமையோடு புலம்புகிறார்.

இரவின் வாயில்..
புகைந்து கொண்டிருக்கும்
“சிகரெட்” நான் என்றும்

கண்களுக்குத் துணிவில்லை
மனம்
அண்ணாந்து பார்க்கிறது
அவமானங்களால்
விரட்டப்பட்ட இடங்களை.. என்றும்

சடைப்பூரானாய் தடித்துக் கிடக்கும்
சிசேரியன் தழும்புகள் காட்டி
வயிறு பார்ப்பாள் தோழி என்றும்

உதிர்ந்துகொண்டிருக்கும்
தன் இறகுகளை
பூச்சிகள் இழுத்துச் செல்வதைப்
பார்த்துக்கொண்டிருக்கும் பறவைக்கு என்றும்



மனக்காயங்களோடு
புகார் கொடுக்கச் சென்ற பெண்களை
உடற்காயங்களோடு
வெளியே எறிந்த காவல் நிலையங்கள் என்றும்

பேய் மழையில் நடுங்கி..
ஒதுங்க வர மாட்டேன் ஒருபோதும்
உங்கள் கௌரவத்தின்
தாழ்வாரத்தில் என்றும்

நுண்ணிய கவிதை உணர்வுகளை உண்மையான எழுத்தில் வடிக்கும் இளம்பிறை, பாராட்டத்தக்கவர். யாளி, களம், திருப்பூர் தமிழ்ச் சங்கம் விருதுகளும் கவிஞர்கள் தின விருதும் பெற்றவர். திரைப்படப் பாடலும் எழுதி வருகிறார்.

இரவின் மடிமுழுதும்
உதிரும் கவிகள்
பொங்கிப் பிரவகிக்கும்
ஒத்தச் சொல்லில்

என்கிறார், இளம்பிறை.

இந்த ஒத்தச் சொல்லுக்காக, அகராதியில் சில பக்கங்களை விட்டுவையுங்கள்.

முதல் மனுஷி

வெளியீடு தமிழ்நெஞ்சம் பதிப்பகம்
59, rue des Entrechats, 95800 Cergy., France




“அடுப்பூதும் பெண்ணுக்கு படிப்பெதற்கு” என்றுகேட்ட பாட்டி மாறிவிட்டாள். “நாலு எழுத்துப் படித்தால்தானே நல்லது கெட்டது தெரியும். புருசனைத் தெரிஞ்சிக்கவாவது படிப்பு வேணாமா” என்கிறாள் இன்று.

“ஒருத்தன் கையில் பிடிச்சு கொடுக்கும் வரை வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கிட்டு அலைகிறேன்” என்ற தாய் மாறிவிட்டாள். “ஒண்டியா நின்னாலும் எல்லாத்தையும் காப்பத்தற வக்கு வேணும், அடங்கிப் போகவும் தெரியணும். அடக்கவும் தெரியணும். இணையா நின்னாத்தானே குடும்பம்” என்கிறாள் இன்று.

இந்தப் பாரம்பரியத்தில் வளர்ந்தாலும், கணிப்பொறிப் படிப்பில் பல்கலைக்கழகம் கண்டாலும், கைக்கெட்டிய தூரத்தில் பல நிறுவனங்களின் நிர்வாகப் பதவிகளே காத்துக் கிடந்தாலும், “உனக்கு அடிமையாய் வரக் காத்திருக்கிறேன்” என்கிறாள் மகள்.

காதல் என்பது வாலிப மனங்களில் தவறாகத்தான் புரிந்து கொள்ளப் பட்டிருக்கிறது. காதல் என்பது புனிதமான அர்ப்பணிப்புதான். அதில் சந்தேகம் இல்லை. ஆனால் ஒருவரை இன்னொருவருக்கு அடிமையாய் அர்ப்பணிப்பது அல்ல. இருவரும் சேர்ந்து தங்களைக் காதலுக்கு அர்ப்பணிப்பது.

அப்படி அர்ப்பணிப்பவர்களே ஒருவரை ஒருவர் உயர்வாய் மதித்து நடப்பர். ஒருவரை ஒருவர் ஓயாது உயர்த்தி வாழ்வர். “கண்ணுக்குள் வைத்துக் காப்பேன்” என்று வீட்டுக்குள் வைத்து பட்டும் பவளமும் தந்து கிளிப்பிள்ளை ஆக்கமாட்டார்கள்.

மணமகனின் இடது கையை மணமகளின் வலது கையில் ஒப்படைக்க மணமகளின் இடது கை மணமகனின் வலது கையில் உள்ளார்ந்த அன்போடு ஒப்படைக்க வேண்டும். அதுதான் வாழ்க்கை. மற்றதெல்லாம் திருமணம் என்ற பெயரில் உறுதி செய்யப்படும் அடிமைத்தனங்கள்.

“தூக்கிச் சுமப்பதல்ல வாழ்க்கை. இணையாகக் கைகோர்ப்பதும், கை கோக்கும் வலுவினை தன் துணைக்குத் தானே உருவாக்கித் தருவதும்தான் வாழ்க்கை.” ஏற்றத்தாழ்வு இருந்தால் அது காதலே அல்ல. சுயகௌரவத்தைச் சிதைக்கும் எதுவுமே உறவு அல்ல.

மணவாழ்வு என்பது அர்ப்பணிப்பின் உச்சம் என்றே சொல்லலாம். நீடித்த, மாறாத, உறுதியான அர்ப்பணிப்பு இருந்தால் மட்டுமே மணவாழ்வு சிறக்கும். நம்முடைய செயல்கள் எல்லாமே உணர்வை மட்டுமே முன்னிறுத்தியதாக இருக்கக் கூடாது. இன்பச் சூழலில் மட்டுமல்ல, நமக்கு பிடிக்காத அசாதாரண சூழலில் கூட அர்ப்பணிப்பு உணர்வுடன் வாழ வேண்டும். அது வெறும் வார்த்தையில் மட்டுமல்ல, செயலிலும் இருக்க வேண்டும். சில வேளைகளில் செயலில் மட்டுமல்ல,

# ஒன்றையேனும் நிகழ்த்திவிடு



சிலிர்த்துக் கொண்டே இருக்க
உன் புன்னகை தூரலை பொழிந்துவிடு



தவித்துக் கொண்டே இருக்க
தழுவிடும் கணங்கள் தந்துவிடு

ரசித்துக் கொண்டே இருக்க
காதல் ராகம் இசைத்துவிடு

கடந்து கொண்டே இருக்க
பயணத்தின் பாதையை
பகிர்ந்து விடு

மிளிர்ந்துகொண்டே இருக்க
உன் வண்ணம் என்னில் கலந்துவிடு

தொலைந்து கொண்டே இருக்க உன் சாயலை
என்னில் சேர்த்துவிடு

நெகிழ்ந்து கொண்டே இருக்க
நிழல் நொடிகளை என்னில் நிகழ்த்தி விடு

உயிர்த்துக் கொண்டே இருக்க
உயிரினில் மூச்சாய் கலந்துவிடு

இத்தனை கோரிக்கை உன்னிடம் வைத்தேன்
ஒன்றையேனும் நிகழ்த்திவிடு

தேன்மொழி தேவி

---

வார்த்தையாலும் இதை துணையிடம் வெளிப்படுத்த வேண்டும்.

சட்டப்படி இணைவது மட்டும் திருமண வாழ்வாகி விடாது. நம்முடைய செயல்கள் ஒவ்வொன்றும் துணையின் நன்மையே தனது நன்மை என்பதாக இருக்க வேண்டும். இதற்கு இருவருக்கும் ஆழமான அன்பு வழித் தொடர்பும், புரிதலும் வேண்டும்.

சமூகத்தின் முன் கலாசாரத்தின் காவலர் களாக தன்னை நிலைநிறுத்திக் கொள்ள முயல்வதில் அர்த்தமில்லை. வாழ்வுக் காலம் மிகக் குறுகியது. ஆடம்பரமான வாழ்விற்கு அடிமையாகி பிறருக்காக வாழத் தலைப்பட்டால் வாழ்க்கை மிக நீண்ட பாலைவனப் பயணமாகவே அமைந்துவிடும்.

இன்று நம் குடும்பத்தில் ஆழமான அர்ப்பணிப்பு வாழ்வு இல்லாமல் இருக்கலாம். ஆனால் உற்சாகமெடுத்தால் உணர்வொன்றிய உண்மைக் காதலர் களாகவே நாம் வாழ முடியும்.



# ஏழ்மையின் எதிர்பார்ப்பு

வாழ்க்கையிலே அமர்தற்குச் சிறிய வீடு
வயிறெரிக்கும் பசிதணிக்கக் கொஞ்சம் சோறு
தாழ்ந்திடாமல் மானத்தைக் காப்ப தற்குத்
தகுவுடலை மறைப்பதற்குக் கீழ்மேல் ஆடை
வீழ்ந்திடாமல் தலைநிமிர்ந்து நிற்ப தற்கு
விளங்குகின்ற அடிப்படையாம் இந்த மூன்றே
ஏழ்மையிலே தவிக்கின்ற மக்கள் எங்கள்
எதிர்பார்ப்பாம் இவைகிடைத்தால் வாழ்வோம் நாங்கள் !

பிச்சையாக இலவசங்கள் தேவை யில்லை
பிறக்கின்ற கருணையதும் தேவை யில்லை
முச்சந்தி தனில்நின்று கையை ஏந்தி
மூச்சுவிடும் வாழ்க்கையினை விரும்ப வில்லை
கச்சிதமாய் மதிப்பளித்துப் பணிகொ டுத்துக்
கரங்களிலே உழைப்பதற்கு வழியை செய்தால்
நிச்சயமாய் ஏழ்மையினை ஓட வைத்து
நிறைவாழ்வு வாழ்ந்திடுவோம் வாய்ப்ப ளிப்பீர் !



மாளிகையின் வசதிகளைக் கேட்க வில்லை
மகிழுந்து சொகுசுதனைக் கேட்க வில்லை
கேளிக்கைப் பொழுதுபோக்கைக் கேட்க வில்லை
கேள்விக்கு விடைதேடும் எங்க ளுக்கு
வாலியினை மறைந்திருந்து கொன்ற போல
வளங்களினை சுருட்டுகின்ற கரமி ருந்து
கூலிக்காய் உழைக்குமெங்கள் உழைப்பிற் கேற்ற
கூலிதந்தால் போதுமெங்கள் ஏக்கம் தீரும் !

பாவலர் கருமலைத்தமிழாழன்

# நட்பு!

பூங்குயில் ஓசையைப் பழிக்கும்
புல்லாங் குழலையும் ஒழிக்கும்
தேங்கிய தேனையும் மிகைக்கும்
தென்றலின் பாசையில் நகைக்கும்
தூங்கிட ராகமாய் ஒலிக்கும்
நீங்கிடா நட்பினில் இருக்கும்
நிறைகுடம் எம்மினம் நெருக்கம்!
நட்பெனும் ஆனந்தம் இருக்கும்!!

ஈழத்தென்றல், குவைத்

# தகவல்

இருப்புப் பாதையிலெனை,
இருத்தி வைத்துள்ளாய்.
இருப்புக்கொள்ளவில்லை,
இன்றாவது வருவாயா?

தனிப் பெருங்காதல் நீ! என்
தனிமையை நூற்கின்றாய்

மெயிலை பற்றாதவனே
இரயிலுடன் வந்துசேர்!..

உறையூர் வள்ளி

# விமர்சனம்

ஒரு படைப்பை உள்வாங்குவதை
விடுத்து அதற்குள் படைப்பாளியை
அடையாளம் தேடத்துடிக்கும்
மனோநிலை, படைப்பாளியைப்
பொறுத்தவரை மிகவும்
ஆபத்தானது. இப்படியான
விமர்சனங்களுக்குப் பயந்தும்
வாசகர்களோடு சமரசம்
செய்துகொண்ட கருத்துக்களை
படைப்புக்களில் முன்வைக்க
முனையும் போதும் அவை
ஊனமுற்ற படைப்புக்களாகவே
உருவெடுக்கும்.
எழுதுவதற்கு முன் எதிர்கொள்ளும்
தைரியம் இருந்தால் மட்டுமே
எந்தப் படைப்பும் உயிர் கொள்ளும்.

மாலினி மாலா



பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

சனவரி 2017

